EASTERN UNIVERSITY, SRI LANKA
EXAMINATION BRANCH
10 DEC 2013
VANTHARUMOOLAI,
CHENKALADY

# நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் தேயிலை உற்பத்தியும் அதன் அண்மைக்காலப் போக்கும்

செல்வி. நிசாந்தினி மகாலிங்கம்

பதிவு இலக்கம் : **EU/IS/2006/AC/122**

சுட்டெண் : **CS 2817**

புவியியல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக புவியியல்துறைக்கு சமர்பிக்கப்படுகின்றது.

FAC211
Project Report
Library - EUSL

25 JAN 2014
EASTERN UNIVER

புவியியல் துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2013

PROCESSE
Main Library, EU

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பினை செய்து வருகின்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் தேயிலையே முதலிடம் வகிக்கின்றது. அந்தவகையில் இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவில் தேயிலைச் செய்கை பெருமளவில் செய்கைப்பண்ணப்பட்டு வருகின்றது. இங்கு வாழுகின்ற மக்களில் பெரும்பான்மையோரின் ஜீவனோபாயத் தொழிலாக தேயிலைச் செய்கையே இருந்து வருகின்றது. எனினும் அண்மைக்காலங்களில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் தேயிலை உற்பத்தியானது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.

இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் தேயிலை உற்பத்தியானது குறைவடைந்து கொண்டு வருவதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவேதான் இப்பிரதேசத்தில் தேயிலை உற்பத்தி எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனைக் குறைப்பதற்கான தீர்வாலோசணைகளை முன்வைப்பதனூடாக தேயிலை உற்பத்தியினை அதிகரிக்க செய்வதோடு பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் இவ்வாய்வுக் கட்டுரை ஒரு தீர்வாக அமையும்.

இவ்வாய்வானது ஐந்து பிரதான தலைப்புக்களின் கீழ் ஆராயப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு அத்தியாயங்களாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அத்தியாயங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை சுருக்கமாக நோக்குவோம்.

முதலாவது அத்தியாயத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள்பற்றி விளக்கப்பட்டுள்ளது. அதாவது ஆய்வின் அறிமுகம் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆய்வின் நோக்கம், ஆய்வின் பிரச்சினை, இவ்வாய்வோடு தொடர்புடைய இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மீள்பார்வை பற்றியும் இங்கு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பயன்படுத்தப்பட்ட தரவுகள் எத்தகைய நுட்ப முறைகளினூடாக செய்யப்பட்டுள்ளன என்பது பற்றியும் மற்றும் ஆய்வின் வரையறைகள், ஆய்வின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அத்தியாயத்தில் இவ்வாய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுப்பிரதேசமான நுவரரெலியா பிரதேச செயலகப்பிரிவு பற்றி விளக்கப்படுகின்றது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தின் பௌதிகப் பின்ன்ணியும் நிலப்பயன்பாடும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதோடு ஆய்வுப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கை, சனத்தொகை, போக்குவரத்து குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயத்தில் தேயிலை செய்கை பற்றிய பொதுவான நோக்கு அமைகின்றது. அதாவது தேயிலை பற்றியும் உலகிலும் இலங்கையிலும் தேயிலைக் கைத்தொழில் எவ்வாறு காணப்படுகிறது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

நான்காவது அத்தியாயத்தில் இவ்வாய்வினுடைய முக்கிய விடயமான ஆய்வுப்பிரதேசத்தின் தேயிலை உற்பத்தியும் அண்மைக்கால போக்கும் தேயிலை உற்பத்தி எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயத்தில் இவ்வாய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வாளர்.

## பொருளடக்கம்


| | |
|---|---|
| நன்றியுரை................................................................................................ | i |
| ஆய்வுச்சுருக்கம்.......................................................................................... | ii |
| பொருளடக்கம்............................................................................................ | iii |
| பட விபரம்................................................................................................. | iv |
| ஒளிப்பட விபரம்.......................................................................................... | iv |
| அட்டவணை, வரைபட விபரம்..................................... | v |

முதலாம் அத்தியாயம் - ஆய்வு அறிமுகம்

| | |
|---|---|
| 1.1 அறிமுகம் | 01 |
| 1.2 ஆய்வின் முக்கியத்துவம் | 02 |
| 1.3 ஆய்வின் நோக்கங்கள் | 03 |
| 1.4 ஆய்வுப் பிரச்சினை | 03 |
| 1.5 ஆய்வுப் பிரதேசம் | 03-04 |
| 1.6 ஆய்வு முறையியல் | |
| 1.6.1 ஆய்வுப் பிரதேச எல்லை | 05 |
| 1.6.2 தரவு சேகரிக்கும் முறை | 05-06 |
| 1.6.3 பகுப்பாய்வு முறை | 06 |
| 1.6.4 பயன்படுத்தப்படும் நுட்பங்கள் | 06 |
| 1.6.5 ஆய்வு வரையறைகள் | 07 |
| 1.7 இலக்கிய மீளாய்வு | 07-10 |

இரண்டாம் அத்தியாயம் - ஆய்வுப் பிரதேசம்

| | |
|---|---|
| 2.1 அறிமுகம் | |
| 2.2 அமைவிடம் | |
| 2.2.1 சார்பு ரீதியான அமைவிடம் | |
| 2.2.2 புவியியல் ரீதியான அமைவிடம் | |
| 2.3 பௌதிகப் பின்னணி | |
| 2.3.1 ஆய்வுப் பிரதேச தரைதோற்றம் | 14 |
| 2.3.2 ஆய்வுப் பிரதேச காலநிலை | 15 |
| 2.3.3 ஆய்வுப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் | 16 |
| 2.3.4 ஆய்வுப் பிரதேச மண் வகை | 16 |
| 2.3.5 ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாடு | 17-20 |
| 2.3 பொருளாதார நடவடிக்கைகள் | 20 |
| 2.4 ஆய்வுப் பிரதேசத்தின் சனத்தொகை | 21 |
| 2.5 ஆய்வுப் பிரதேசத்தின் போக்குவரத்து | 21 |

மூன்றாம் அத்தியாயம் - தேயிலைக் கைத்தொழில் பற்றிய பொதுவான நோக்கு

3.1 தேயிலை 22
3.2 உலகின் தேயிலைக் கைத்தொழில் 22-28
3.3 இலங்கையின் தேயிலைக் கைத்தொழில்
3.3.1 இலங்கைக்கு தேயிலை வருகை 28
3.3.2 இலங்கையின் தேயிலை உற்பத்திக்கானபௌதிகப் பின்னணி 29
3.3.3 தேயிலை பதனிடல் 29-30
3.3.4 இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் 32-37
3.3.5 இலங்கையின் தேயிலை சார்ந்த அரச கொள்கை 37

நான்காம் அத்தியாயம் - தேயிலை உற்பத்தியின் அன்மைகாலப் போக்குகளும் பிரச்சினைகளும்.

4.1. இலங்கையின் தேயிலை உற்பத்தியின் அன்மைக்காலப் போக்குகள் 38-54
4.2. ஆய்வுப் பிரதேசத்தின் தேயிலைச் செய்கை 54-56
4.3. ஆய்வுப் பிரதேசத்தின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் பிரச்சினைகளும் 57-71

ஐந்தாம் அத்தியாயம் - ஆலோசனைகளும் தீர்வுகளும் 72-74
முடிவுரை. 75
உசாத்துணை நூல்கள் 76

படங்கள்

1. ஆய்வுப் பிரதேசம் 04
2. ஆய்வுப் பிரதேசத்தின் சார்பு ரீதியான அமைவிடம் 12
3. ஆய்வுப் பிரதேசத்தின் புவியியல் ரீதியான அமைவிடம் 13
4. ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாடு 18
5. உலக நாடுகளின் தேயிலைச் செய்கையின் பரம்பல் 24
6. இலங்கையின் நிலப்பயன்பாடு 31

ஒளிப்படங்கள்

1. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் வகைகள் 34
2. தேயிலைக் கொழுந்து பறிக்கப்படல், கத்தரிக்கும் இயந்திரம் 61
3. தேயிலை உற்பத்தியில் நவீன இயந்திரங்கள் 62
4. பனிப்பொழிவினால் பாதிக்கப்பட்ட தேயிலைத் தோட்டம் 63
5. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் பழைமையான தேயிலைச் செடிகள் 64